**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.4/2022 |
| Prosecution Witness | : | அ.சா.2 |
| Name | : | அண்ணாதுரை |
| Father's/Husband Name: | : | பெருமாள் |
| Address : | : | முத்துலெட்சுமி நகர், முதல் தெரு, நான்கு ரோடு, பெரம்பலூர் |
| Age | : | 53/2023 |

தேதி: 14 /02/2023

**முதல் விசாரணை :** சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **(எதிரிகள் ஆஜர்).**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை ரோந்து எண்.4 ல் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு பெரம்பலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றினேன். கடந்த 15/11/2020 அன்று நான் பெரம்பலூர் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது உதவி ஆய்வாளர் திருமதி.செந்தமிழ் செல்வி அவர்களுக்கு உதவியாக தலைமை காவலர்கள் மான்சிங் மற்றும் கார்த்திக் ஆகியோருடன் வாகன தணிக்கைக்கு சென்றேன். அப்போது பெரம்பலூர் - ஆத்தூர் ரோட்டில் வாகன தணிக்கை செய்தபோது, TN 46 Y 1109 என்ற வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்த போது அதை ஓட்டி வந்த பெரம்பலூர் திருநகரை சேர்ந்த முத்தையா மகன் முத்துசாமி என்பவர் மது போதையில் இருந்தது தெரியவந்தது. அதனால் மது போதை வழக்கு பதியப்பட்டது. அப்போது

அவர் அவரது மொபைல் போனை எடுத்து யாருக்கோ போன் செய்தார். சற்று நேரத்தில் மூன்று பேர் அங்கு வந்தனர். அவர்களின் பெயரை விசாரித்த போது ஒருவரின் பெயர் பாலாஜி என்றும், மற்ற நபர்களின் பெயர்கள் கோகுல் மற்றம் சங்கிலி என்றும், அவர்கள் துறைமங்களம், பங்களா தெருவை சேர்ந்தவர்கள் என்றும், வாகனம் எங்களது வாகனம் என்றும், எப்படி எங்கள் வாகனத்தின் மீது வழக்கு பதிவு செய்ய முடியும் என்றும், வழக்கு பதிவு செய்தால் உங்களை அடித்து கொன்றவிடுவோம் என்றும், மிரட்டினார்கள். உதவி ஆய்வானர் மது போதையில் வாகனத்தை ஓட்டியதற்கான இரசீதை முத்துசாமியிடம் கொடுத்துவிட்டு வாகனத்தை கைப்பற்றி காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளர் கொண்டுவந்து ஆய்வாளரிடம் புகாராக கொடுத்தார். அந்த புகாரின் அடிப்படையில் என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

என்னை ஆய்வாளர் 15/11/2020 அன்று இரவு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். நான் தற்போது கூறிய சங்கதிகளைதான் காவல் ஆய்வாளர் விசாரணையின்போதும் கூறினேன். நாங்கள் எந்த பணியில் ஈடுபட்டோம் என எங்களது காவல் நிலையத்தில் பராமரிக்கப்படும் டைரியில் குறித்து வைத்துவிட்டுதான் செல்வோம் என்றால் சரிதான். மது போதையில் வாகனத்தை ஓட்டி வந்த முத்துசாமியின் மீது வழக்கு பதிவு செய்யவில்லையா என்றால் அவர் மீது மோட்டார் வாகன சட்டம் பிரிவு 185-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. நாங்கள் காவல் நிலையத்தில் குறித்து

வைத்துவிட்டு சென்ற டைரியை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது ஆய்வாளரின் பணி. நான் சம்பவ இடத்தில் அன்றைய தினம் இல்லை என்றாலும், ஆஜர் எதிரிகள் அன்றைய தினம் அந்த இடத்திற்கு ஒருபோதும் வரவில்லை என்றாலும், புகார்தாரர் எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர் என்பதால் அவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.